செ.வெ.எண்-22 நாள்-16.04.2019

## சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தினை தேர்தல் பொது பார்வையாளர் அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தினை 27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தல் பொது பார்வையாளர் **முனைவர்.கே.ஹெச்.குல்கா்னி, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019 சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்கு வாக்கு எண்ணும் மையமான தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மின்னணு வாக்குப்பெட்டிகளை கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கவுள்ள பாதுகாப்பு அறைகள், வாக்கு எண்ணப்படவுள்ள மையங்கள், தேர்தல் மேற்பார்வையாளர்கள் அறைகள், ஊடக மையம் ஆகியவைகள் உள்ள இடங்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில், மாவட்ட வருவாய் அலுவலர் பொற்கொடி, உடையார்பாளையம் கோட்டாட்சியர் ஜோதி, வட்டாட்சியர்கள் கதிரவன், குமரய்யா மற்றும் காவலத்துறையினர், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**